# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 183/2017 | அரசு தரப்பு | அ.சா.1 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | சரண்யா | வயது | |
| தகப்பனார் பெயர் | ராஜு | | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 5th day of July 2022.

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை மடிப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். 2009 ஆம் நவம்பர் மாதத்திலும் நான் சென்னையில்தான் வசித்து வந்தேன். 7.11.2009 தேதியில் நான் சென்னையில் இருந்தபோது எனக்கு கோயமுத்தூரில் உள்ள எங்கள் வீட்டில் குடியிருந்து வந்த பாலசுந்தரம், வனஜா ஆகியோர்கள் எனக்கு இரவு 9 மணிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது அப்பா இரவு நேரம் ஆகியும் வீட்டிற்கு வரவில்லை என்றும், வழக்கமாக சீக்கிரம் வந்து விடுவார் என்றும் தெரிவித்தார்கள். நான் எனது அப்பாவின் செல்பேசிக்கு தொடர்பு கொண்டு பேச முயற்சித்தேன். ஆனால் அவருடைய போன் சுட்ச்ஆப் செய்யப்பட்டிருந்தது. அதனால் நான் அன்று இரவே சென்னையிலிருந்து பேருந்து மூலமாக கோவையில் உள்ள என் வீட்டிற்கு வந்தேன். என்னுடன் என்னுடைய அக்கா சத்தியா மற்றும் மாமா மதன் ஆகியோர்களும் என்னுடன் கோவைக்கு வந்தார்கள். வந்தபிறகு சுற்றுப்புறப்பகுதிகளில் நாங்கள் விசாரித்தோம். மேலும் எனது அப்பாவிற்கு உடல்நிலை நன்றாக இல்லாத நிலை இருந்ததால் மருத்துவமனைகளிலும் தேடினோம். 8.11.2009 ஆம் தேதி அன்று பி.5 சிங்காநல்லூர் காவல் நிலையம் சென்று தகவல் சொன்னோம். எங்களை மீண்டும்

தேடி விசாரித்துவிட்டு வரும்படி சொன்னார்கள். தேடி பார்த்தும் கண்டுபிடிக்க இயலாததால் 10.11.2009 ஆம் தேதி அன்று எழுத்து பூர்வமாக புகார் மனுவினை காவல் நிலையத்தில் கொடுத்தேன்.

(இந்நிலையில் அசல் ஆவணங்கள் ஏற்கனவே SC.51/2012 ல் குறியீடு செய்யப்பட்டுள்ளதால் அந்த ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் இந்த வழக்கில் குறியீடு செய்வதற்கு தயாராகாத நிலையில் இருப்பதால் சாட்சியம் மூலமாக ஆவணங்கள் குறியீடு செய்வது இயலாத காரியம் என்பதால் சாட்சி விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஓம்/சரண்யா,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/K.Rajasekar,
Principal District Judge,
Coimbatore.